# இயற்கை எதிரிகளின் செயல்பாடு குறித்த வயல் விழா

**தருமபுரி, பிப்.22:** தருமபுரி மாவட்டம், பாப்பாரப்பட்டியில் உள்ள வேளாண்மை அறிவியல் நிலையத்தில் சுற்றுச்சூழல் அழுத்தத்தை தாங்கிச் செயல்படும் இயற்கை எதிரிகளின் செயல்பாடு குறித்த வயல் விழா சனிக்கிழமை நடைபெற்றது.

பாப்பாரப்பட்டி வேளாண்மை அறிவியல் நிலையம், பெங்களூரு தேசிய வேளாண் பூச்சிகள் ஆராய்ச்சி அமைப்பு சார்பில் நடைபெற்ற வயல் விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு, தொழில் நுட்பக் கையேட்டை வெளியிட்ட தில்லி வேளாண்மை புதுமை திட்ட ஒருங்கிணைப்பாளர் சுதீர் கொச்சார் பேசியது:

மேம்படுத்தப்பட்ட டிரைக்கோகிரம்மா கைலோனிஸ் பல ரசாயன பூச்சிக் கொல்லி மருந்துகளை தாங்கிச் செயலாற்றும் திறன் படைத்தது. ஒரு டிரைக்கோகிரம்மா முட்டை ஒட்டுண்ணி அட்டையை 16 துண்டுகளாக வெட்டி, ஹெக்டேர் பயிருக்கு 48 துண்டுகளாக்கி இலையின் அடிபாகத்திலோ அல்லது குருத்திலோ வைக்க வேண்டும். இதைப் பயன்படுத்துவதால் நுண்கொல்லி மருந்துகளைத் தெளிப்பது 50 சதம் வரை குறையும் என்றார் அவர்.

தேசிய வேளாண் பூச்சிகள் ஆராய்ச்சி அமைப்பின் இயக்குநர் ஆபிரகாம் வர்கீஸ், தோட்டக் கலைத் துறை துணை இயக்குநர் கலைச்செல்வி, திட்ட ஒருங்கிணைப்பாளர் நா.தமிழ்ச்செல்வன் உள்ளிட்டோர் பேசினர். 100-க்கும் அதிகமான விவசாயிகள் கலந்து கொண்டனர்.

ஏற்பாடுகளை நிலைய உதவிப் பேராசிரியர்கள் பா.ச.சண்முகம், க.இந்துமதி ஆகியோர் செய்திருந்தனர்.